பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 03 சனிக்கிழமை (19 09-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 296

# வலிகாமம் மேற்கில் நேற்று படையினர் முன்னேற முயற்சி

## பண்டத்தரிப்பு, தொட்டிலடியை இலக்கு வைத்து நகர்வு

யாழ்ப்பாணம், செப். 19

வலி. மேற்குப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் நேற்றுக்காலை திடீரென தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேற முயன்றனர்.

பண்டத்தரிப்பு, தொட்டிலடிப் பகுதிகளை இலக்கு வைத்து நகர முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர். நகர்ந்து தரித்த பகுதிகளில் நிலைகொள்ள முடியாமல் படையினர் பின்வாங்கிச் செல்வதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 5 45 மணியளவில் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு அளவெட்டி வடக்குப் பகுதியில் இருந்து விளான், தொட்டிலடிப் பகுதிகளை நோக்கியும்— இளவாலை, மாதகல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. மேற்குப் பகுதிகள் மீது ராணுவம் நேற்று ஷெல் மழை!

### இருவர் பலி; உடைமைகள் நாசம்

யாழ்ப்பாணம், செப். 19

வலி மேற்கு, வலி வடக்குப் பகுதிகளில் நேற்றுக் காலை படையினரின் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, மக்கள் குடியிருப்புகளை நோக்கி அகோர பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பலாலி, கட்டுவன், அளவெட்டி, மாதகல், காரைநகர் பகுதிகளில் நிலைகொண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஷெல், துப்பாக்கி சூட்டினால் 20 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், செப். 19

வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் நேற்று படையினர் நடத்திய அகோர ஷெல் தாக்குதல்களினாலும் துப்பாக்கிச் சூடுகளினாலும் இருபதுக்கும் அதிகமான பொதுமக்கள் காயமடைந்தனர்; முப்பதுக்கும் அதிகமான வீடுகள் அழிந்தன.

சுழிபுரம் பத்திரகாளி கோயில் பகுதியில் விழுந்த ஷெல்லினால் சிவசுப்பிரமணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் ஊரடங்கு!

கொழும்பு, செப். 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள தீவுப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நேற்றுக் காலை 6 மணி முதல் ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்திருப்பதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

## யாழ். கரையோரப் பகுதிகள் மீது நேற்றுக் காலை திடீர்த் தாக்குதல்!

### 4 பேர் காயம்; பல வீடுகள், உடைமைகள் சேதம்

குருநகர், செப். 16

மண்டைதீவு முகாமிலிருந்தும் மண்டைதீவு, சிறுத்தீவு கடற் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த பீரங்கிப் படகுகளில் இருந்தும் யாழ். கரையோரங்களை நோக்கி நேற்றுக் காலை 6 மணியளவில் படையினர் திடீரென ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். 50 கலிபர் வேட்டுக்களும் விடாது தீர்க்கப்பட்டன.

பத்துக்கும்மேற்பட்ட ஷெல்கள் குருநகர் மற்றும் கொட்டடிப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

அவற்றில் ஒன்று யாழ். கின்னஸ்கடைக்கு அருகில் உள்ள புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தையின் பணிமனையில் வீழ்ந்து வெடித்தது.

எனினும் பங்குத் தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகள் மயிரிழையில் உயிர் தப்பினார். அப்பகுதியில் நின்ற சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த ஷெல் தாக்குதல்களினால் நால்வர் காயமடைந்தனர். பத்துக்கு மேற்பட்ட வீடுகளும் பெருமளவு உடை [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மண்டைதீவுக் கடலில் கடற்படை ரோந்து

அரியாலை, செப். 19

மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் கடற்படை படகுகளின் நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டது.

சிறுத்தீவு கடற்பிராந்தியத்தில் இரு பாரிய கடற்படைக் கப்பல்கள் நிலைகொண்டுள்ளன. இக்கப்பல்களுக்கு அருகில் இரண்டு சிறிய பீரங்கிப் படகுகள் நிற்பதாகவும் —

அவை அடிக்கடி, மண்டைதீவு கடற் பிரதேசத்தில் ரோந்து சுற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நேற்று ஆரம்பமானது ஒப்பரேஷன் சண்டமாருதம்

ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று வலி. மேற்கில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் சண்டமாருதம்" எனப் பெயரிடப்பட்டிருந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவின் வழி நடத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான துருப்புகளைக் கொண்ட மூன்று படையணிகள் பங்குபற்றின. கடல், மற்றும் ஆகாயப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நேற்றுக் காலை ஆரம்பித்த இந்த நடவடிக்கை ஆறரை மணி நேரத்தின் பின்னர் முடிவடைந்தது — இப்படி மேலும் அறிவிக்கப்பட்டது.

(உ-எ)

## ஹெலிக்கொப்டர்களும் பரவலாகத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 19

நேற்று படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது வலி. மேற்கு, வலி. வடக்குப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர்கள் பரவலாகத் தாக்குதல்களை நடத்தின.

நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை இப்பிரதேசங்களின் மீது வட்டமிட்ட வண்ணம் இருந்த ஹெலிக்கொப்டர்கள் அவ்வப்போது துண்டுப் பிரசுரங்களையும் தூக்கி வீசின.

சண்டிலிப்பாய், அளவெட்டி தெற்கு, மாகியப்பிட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், சித்தன்கேணி, வட்டுவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கானோர் நேற்று அகதிகளாயினர்

யாழ்ப்பாணம், செப் 19

அளவெட்டிப் பகுதியிலும், வலிகாமம் மேற்கின் பல கிராமங்களிலும் இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களையும் ஹெலி வேட்டுக்களையும் அடுத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தனர்.

உடுத்த உடையுடனும், கையில் அகப்பட்ட சொத்துக்களுடனுமாக காலைப் பொழுதில் தமது வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் எங்கு செல்வதென்று தெரியாது மானிப்பாய், உடுவில், நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் வீதி வீதியாக அலை மோதினர்.

அளவெட்டி தெற்கு, அள

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பல பொதுமக்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப். 19

நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது நூற்றுக்கும் மேற்பட்டோர் படையினரிடம் சிக்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது.

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஆலய சுற்றாடலில் தங்கியிருந்த மக்களே படையினரிடம் சிக்கியதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை —

பண்டத்தரிப்பு மாத்திரா தேவாலயத்தில் தங்கியிருந்த மதகுருமார்களும், கன்னியாஸ்திரிகளும் படையினரிடம் சிக்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

(உ-3)

## தாக்குதல் நடவடிக்கை நேற்றே முடிவுற்றதாம்!

லண்டன், செப். 19

"யாழ். குடா நாட்டில் மாதகல் பகுதியில் படையினர் நேற்று மேற்கொண்ட சிறிய அளவிலான தாக்குதல் நடவடிக்கை முடிவடைந்து விட்டது. 9 மணி நேரத் தாக்குதலை அடுத்து படையினர் மாதகல் முகாமுக்குத் திரும்புகிறார்கள்."

—ஸ்ரீலங்கா இராணுவ அதி

(2 ஆம் பக்கம் பார்க்க)

குளமில்லா ஊருக்குப் பசுமை இல்லை
நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில்

1992/93 கல்வியாண்டிற்கான யாழ்., பேராதனை வளாக

G.A.Q, B.A. வகுப்புக்கள்

ஆரம்பமாகிவிட்டன

சனி: பிற்பகல் 2.00 மணி
ஞாயிறு: முற்பகல் 10.00 மணி

விபரங்களுக்கு:- நிர்வாகி,

கலைமகள் கல்வி நிலையம்

மீசாலை வடக்கு,
(மண்டுவில் அம்மன் கோவிலடி)
சாவகச்சேரி.

(22601)


சாவகச்சேரி நகராட்சிமன்றம்

## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாக பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் திரியும் நாய்கள், இதற்கென இச்சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
18-09-92 [இ/3289]

## முக்கிய அறிவித்தல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

### கிளைக்குழுத் தேர்தல் ஒத்திவைப்பு

தேர்தல் உத்தியோகத்தர் திரு. எ. சின்னத்தம்பி அவர்களின் கடிதப்படி 19-09-1992இல் நடத்தப்பட இருந்த கிளைக்குழுத் தேர்தல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது. இத் தகவலைச் சகல கிளைக்குழு உறுப்பினர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

பொ. கிருஷ்ணமூர்த்தி,
செயலாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

[இ-3287]

## கண்ணீர் அஞ்சலி

### வை. இரத்தினசபாபதி

18-09-1992 நேற்றுக் காலை சுழிபுரப்பகுதியில் நடைபெற்ற எறிகணைத் தாக்குதலில் எமது வகுப்பு மாணவன் இ. வைத்திலிங்கத்தின் தந்தையாரான வை. இரத்தினசபாபதி அவர்கள் அகால மரணமானார்.

அன்னாருக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

ஆண்டு 10A, மாணவர்கள்,
யாழ். இந்துக்கல்லூரி.

[22599]

## மரண அறிவித்தல்

### திருமதி பேரம்பலம் பொன்னம்மா

கோணாவளை ஒழுங்கை கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி பேரம்பலம் பொன்னம்மா சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தவாளமலர் (பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), புஷ்பராணி, சதாரூபவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகநாதனின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும், அமலினி, அருண் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சரவணபவானின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 1 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செல்வி த. பேரம்பலம்
(மகள்)

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.
[22603]

## உற்சவங்கள்

சாவகச்சேரி, செப்: 19

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நாளை முதல் மூன்று நாட்களுக்கு மகாசண்டி ஹோம விழா எனும் சிறப்பான வேள்வி நடைபெறவுள்ளது.

நாளை நவக்கிரக ஹோமம், துர்க்கா ஹோமம் என்பனவும் திங்களன்று சண்டி ஹோமமும் செவ்வாயன்று மகா அபிசேகமும் விசேட பூசை, சுமங்கலி பூசை என்பனவும் நடைபெறும். (அ-51)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமையும், ஏனைய புரட்டாதிச் சனி தினங்களிலும் விசேட சனீஸ்வர பூசைகள் நடைகள் நடைபெறும். (அ)

★ ★ ★

முகமாலை புனித ஆரோக்கிய மாதா (வேளாங்கண்ணி) யாத்திரை ஸ்தலத் திருவிழாவில் இன்று மாலை 6.30க்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு திருப்பலியும் 7.30 மணிக்கு திருவிழா திருப்பலி, திருச்சொரூப பவனி என்பனவும் நிகழும். (அ)

★ ★ ★

புலோலி மேற்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த சங்காபிஷேகத் திருவிழா நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ)

★ ★ ★

உரும்பிராய் புனித மைக்கேல் தேவாலயத்தின் வருடாந்த நவநாள் உற்சவம் நாளை 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. தினமும் மாலை 5.30 மணிக்கு திருப்பலி இடம்பெறும்.

28 ஆம் திகதி இரவு 7 மணிக்கு நற்கருணை வழிபாடும் 29 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் பூசைப் பலியும் இடம்பெறும். (அ)

## சிவாசாரியார் குறித்துப் பேருரை

யாழ்ப்பாணம், செப். 19

சந்தானகுரவர் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகளின் பிரார்த்தனை நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சித்தாந்தமணி, சைவப் புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

மெய்கண்டதேவர் சிவஞான சைவசித்தாந்த உயர் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

### தாக்குதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகள் இப்படித் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை விஸ்தரிக்கவும் அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்தவுமே சிறிய அளவிலான தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் —

நேற்றுக் காலை துருப்புக்கள் கரையோரப் பகுதியில் இருந்து நகரை நோக்கி முன்னேறிய சமயம் விடுதலைப் புலிகளுடன் கடும் சண்டை நடந்ததாகவும் —

இந்தச் சண்டையில் இரு படையினர் கொல்லப்பட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

நேற்றைய தாக்குதல் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு துருப்புக்கள் மாதகல் காவலரணுக்குத் திரும்புவதாகவும் —

அடுத்த சில நாட்களில் ஊரடங்கு நீக்கப்படும் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக பி. பி. ஸி மேலும் குறிப்பிட்டது. (உ-3)

## ஊரடங்கின் மத்தியிலும் உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் நான்காம் நாளான நேற்று உண்ணாவிரதம், சிரமதானம் மற்றும் சமூகப் பணிகள் உணர்வு பூர்வமாகவும், எழுச்சியுடனும் நடைபெற்றன.

பாதுகாப்புப் படையினர் நேற்றுக் காலை முதல் ஊரடங்கு உத்தரவை அமுல் செய்திருந்தபோதிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆங்காங்கே நடந்த உண்ணாவிரதம் மற்றும் சிரமதான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

கோட்ட, வட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அவ்வப்பகுதி மக்கள் உண்ணாவிரதமிருந்தனர். சிரமதான நிகழ்வுகளும் குறிப்பாக அகதி முகாம்களின் சுகாதாரத்தை பேணும் வேலைகளும் நடைபெற்றன.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்றும் வழமைபோல பெரும் எண்ணிக்கையான மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். நேற்றைய உண்ணாவிரதத்தில் ஏராளமான பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த பந்தலிலும் பெரும் எண்ணிக்கையானோர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

நாகர் கோவிலில் [கடற் புலிகள்] உண்ணா நோன்பில் வடமராட்சி கிழக்கு பாடசாலை மாணவர்கள் சுழற்சி முறையில் உண்ணா நோன்பை மேற்கொண்டுள்ளனர்.

இன்று 19 ஆம் திகதி மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் உண்ணாவிரதமிருப்பர்.

[அ-15-162-17-165]

## சென் ஜோன்ஸ் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆண்டு பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

வைத்திய கலாநிதி ம. கணேசரட்ணம், திருமதி நிர்மலா தாமினி கணேசரட்ணம் ஆகியோர் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

### வலிகாமம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முனைகளிலிருந்து பண்டத்தரிப்பு சில்லாலைப் பகுதிகளை நோக்கியும் படையினர் நகர முயன்றனர்.

அவர்களை விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தி தாக்கிய போது கடும் சண்டை மூண்டது.

அளவெட்டி வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம்— செம்பாடு பகுதியூடாக முன்னேறி பண்டத்தரிப்பு பத்திமா தேவாலயத்தை அடைய—

விளானில் இருந்து வந்த படையினரும் அவர்களுடன் சேர்ந்து பண்டத்தரிப்பு நோக்கி முன்னேற முயன்றனர்.

பெரியவிளான் சந்திக்கு சமீபமாக விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

இந்தச் சண்டையில் படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் மூன்றரை மணி நேரம் நடந்த சண்டையை அடுத்து படையினரின் நகர்வு நிறுத்தப்பட்டது. எனினும் அயலில் உள்ள குடியிருப்புகளை நோக்கி படையினர் விடாது ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

படையினர் முன்னேறித் தரித்த பகுதிகளில் நிலை கொள்ள முடியாது பின்வாங்கிச் சென்றதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-3-15)

### பல்லாயிரக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டி மேற்கு, சுழிபுரம், பனிப்புலம், சாந்தை, தொட்டிலடி, சண்டிலிப்பாய், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சங்கானை ஆகிய இடங்களிலிருந்து காலையிருந்தே மக்கள் இடம்பெயரத் தொடங்கிவிட்டனர்.

மானிப்பாய், நவாலிப் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் ஒரு சிலரால் மட்டுமே இடம் பிடிக்க முடிந்தது. நேற்று நண்பகலே எமது செய்தியாளர்கள் முகாம்களுக்குச் சென்ற போது அவை நிரம்பி வழிந்தன.

பலர் குழந்தைகளுடனும் நோயாளர்களான வயோதிபர்களுடனும் வீதிகளில் அலைந்தனர். பலர் மரங்களின் கீழும் கைவிடப்பட்ட கட்டிடங்களிலும் தற்காலிக தரிப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். பலர் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கினர்.

நேற்று இரவு 8 மணிக்கு எமது செய்தியாளர் மானிப்பாய், சண்டிலிப்பாய் பகுதிகளுக்குச் சென்ற போதும் மக்கள் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்றனர். சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை வரை அதே காட்சியையே காண முடிந்தது. பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் நடந்தே வந்து கொண்டிருந்தனர். பலர் வண்டில்களிலும், சிலர் டிராக்டர்களிலும் வந்துகொண்டிருந்தனர். முதியவர்களைச் சைக்கிள்களில் ஏற்றிக் கொண்டு பலர் உருட்டியபடியே வந்ததையும் காண முடிந்தது.

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் உடுவில், மருதனார்மடம் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஒரு பகுதியினர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மல்வம் தேவாலயம் ஆகிய முகாம்களுக்கும் சென்றனர். அவையும் நிரம்பி வழிந்தன.

இடம் பெயர்ந்தவர்கள் எதிர்வரும் நாட்கள் எப்படி ஆகுமோ என்று வேதலித்த நிலையில் அலைவதையும் காண முடிந்தது.

[அ-ம-3-15-13-28-100-17-162]

சாவகச்சேரி நகரசபை

## பொது அறிவித்தல்

1992 ஆம் ஆண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 30-09-92 க்கு முன் அவற்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி,
(சி-3288)

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
18 - 9 - 92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுடன் பேச்சு:

# அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 19

விடுதலைப் புலிகள் நிபந்தனைகளை ஏற்ற தீர்வுக்கான யோசனைகளை முன் வைத்தால் அவற்றை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்போம். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டார்.

அரசாங்கம் விதித்துள்ள நான்கு நிபந்தனைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றால் தெரிவுக் குழுவிடமும் அதன் யோசனைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் சொன்னார். [இ-எ]

## விவசாயக் கல்லூரியை மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற முயற்சி

1990 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய அசம்பாவிதங்களைத் தொடர்ந்து வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வவுனியா விவசாயக் கல்லூரியை மீண்டும் வவுனியாவில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் விவசாயத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை — 1993 ஆம் கல்வி ஆண்டிற்கு விவசாயப் பயிற்சிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [இ-எ]

பத்மநாபா கொலை வழக்கு:

## எதிரிகள் மீது ரகசிய விசாரணை

சென்னை, செப். 19

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் தி.மு.க. அமைச்சர் சுப்புலட்சுமி உட்பட 18 எதிரிகளும் சென்னை விசேட நீதிமன்றத்தில், ஆஜர் செய்யப்பட்டு இரகசிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேல் விசாரணை எதிர் வரும் 23ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எதிரிகளில் சுப்புலட்சுமியின் கணவர் ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன், வை. ரவிச்சந்திரன் வழக்கறிஞர்கள் வீரசேகரன், மருதநாயகம் ஆகியோரும் அடங்கி உள்ளனர்.

விசாரணையின் போது வழக்கறிஞர் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இரகசிய விசாரணையின் போது குற்றப் பத்திரிகையின் ஒரு பகுதி எதிரிகளிடம் வழங்கப்பட்டது (இ-எ)

அகதிகள் உலர் உணவு நிவாரணம்

## அடுத்த ஆண்டு தொடக்கம் முழுமையாகக் கிடைக்குமாம்

கொழும்பு, செப். 19

அகதிகளுக்கான உலர் உணவு நிவாரண உதவிகள் அடுத்த ஆண்டு முதல் முழுமையாக வழங்கப்படும் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண உதவி இம் மாதம் முதலாம் திகதி முதல் அரைவாசியாகக் குறைக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதுபற்றி செய்தியாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை ராஜாங்க அமைச்சின் செயலாளர் டாக்டர் ராஜா அமரசேகரா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

''உலர் உணவு நிவாரண உதவி அடுத்த ஆண்டு முதல் முழுமையாக வழங்கப்படும். இந்த நான்கு மாதங்களும் அகதிகளுக்கு உதவுவதில் அரச சார்பற்ற நிறுவனங்களினதும், இலங்கைக்கு உதவும் நாடுகளினதும் உதவியை அரசு கோரியுள்ளது''—

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

## கடலில் கொட்டிய தோட்டாக்கள் 40 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாம்

கொழும்பு, செப். 19

காலிக் கடலில் கொட்டப்பட்ட தோட்டாக்கள் மற்றும் வெடி மருந்துகள் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவை பெல்ஜியம் கம்பெனி ஒன்றுக்குச் சொந்தமானவை என்றும் அரசுக்குச் சொந்தமானவை அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடலில் கொட்டப்பட்ட ஆயுதங்கள் எல்லாம் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது தயாரிக்கப்பட்டவை என்று கொழும்பில் கூறப்பட்டது. [இ-எ]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### நாட்டியக் கலைமணிச் சான்றிதழை இரத்துச் செய்தல்

செல்வி பிரியதர்சினி அமிர்தலிங்கம்

மேற்கூறியவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1989 டிசம்பரில் வழங்கிய நாட்டியக் கலைமணிச் சான்றிதழ், உடனடியாக இரத்துச் செய்யப்படுகிற தென்பதை அரச நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

இச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் இவருக்கும் ஏதும் நியமனம் வழங்கப்பட்டால், அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறுப்பாகமாட்டாது.

- பதிவாளர்.

(இ-3285)

## மட்டக்களப்பில் உ. அ. அதிபர் கைது

கொழும்பு, செப். 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தீவிரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

இப்படி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. [இ-எ]

## கர்ப்பிணிகளுக்கு இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம். செப். 19

நல்லூர் லயன்ஸ் கழகம் வசதி குறைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இலவச ஆலோசனை, பரிசோதனை, சிகிச்சை ஆகியவற்றை வழங்க உள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிறு காலை 8-00 மணிக்கு கொக்குவில் முச்சந்திக்குச் சமீபமாக உள்ள கொக்குவில் மத்தி மாதர் சங்கப் பொருளாளரின் இல்லத்தில் டாக்டர் சபாரத்தினத்தினால் இச் சேவை வழங்கப்படும். (இ)

## இரவு நேரம் மீன் பிடிக்க அனுமதி

குருநகர், செப். 19

குடாக்கடல் பகுதிகளில் இரவு நேரம் மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## கரையோரப் பகுதி பாதுகாப்பு உஷார் நிலையில்

சென்னை, செப் 19

தமிழ் நாட்டுக் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் உஷாரப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

விசேட பொலீஸ் மற்றும் கடற்படையினர் கரையோரப் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரதும் தமிழகத்தில் உள்ள சில அமைப்புகளினதும் நடவடிக்கைகளை [illegible] இவ்வாறு பாதுகாப்பு [illegible] தாகத் தகவல்கள் தெரிவித்தன. (இ-எ)

திலீபன் நினைவாக

## இன்று இடம் பெறும் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம் செப். 19

லெப். கேர்ணல் திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டானத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று சனிக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ள சிரமதானப் பணிகளின் விவரம் வருமாறு:

தீவகக் கோட்டம்: மணியரசன் குடியிருப்பில் துப்புரவுப் பணி, மணியரசன் குடியிருப்பு மக்களால் மேற்கொள்ளப்படும்.

வலிகாமம் கோட்டம்: சண்டிலிப்பாய் வட்டத்தில் முள்ளிக்கிராமத்தில் 200 குடும்பங்களுக்கு மலசல கூட சுகாதார வசதிகள் இன்று சிரமதான மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

கோப்பாய் வட்டத்தில் நீர்வேலியில் வெள்ள வாய்க்கால் வீதியும், செட்டிச்சிதாஸ் அண்ணா வீதியும் செப்பனிடப்படும்.

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் அம்பன் மருத்துவமனை கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஏற்பாட்டில் துப்புரவு செய்யப்படும்.

தென்மராட்சிக் கோட்டத்தில்: கொடிகாமம் வட்டத்தில் கச்சாய் பாடசாலை வீதி, துப்புரவு செய்யப்படும்.

இவை தவிர கடற்புலிகளின் அனுசரணையுடன் இன்று வடமராட்சி சுப்பர் மடம் சந்திக்கு அருகாமையிலும், நாகர் கோவிலில் வடக்கு அரசடிச் சந்திக்கு அருகாமையிலும் மற்றும் பாஷையூர், எழிலூர் மாவீரர் பாலர் பாடசாலை முன்றலிலும் இன்று உண்ணாவிரதம், நினைவஞ்சலிக் கூட்டம் என்பன இடம்பெறவுள்ளன. [ம-144]

## யாழ். மாநகராட்சி பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். மாநகராட்சி மன்றம் வீட்டுவளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் திட்டத்தின் 5ஆம் கட்டம் கீழ் 24ஆம் திகதி முதல் அக்டோபர் இரண்டாம் திகதி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ள மையங்களின் விவரம் வருமாறு:

24-09-92 வியாழன்:- மு.ப. 8-30 மணி முதல் 12-30 மணி வரை யாழ். மாநகராட்சிமன்ற பிரதான அலுவலகம், அன்னசத்திர ஒழுங்கை பிள்ளையார் கோவிலடி.

பி.ப. 2 மணி முதல் 4 மணி வரை சட்டநாதர் கோவிலடி, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை- குமாரசுவாமி வீதிச் சந்தி.

25-09-92 வெள்ளி: மு.ப. 8-30—12-30 வரை வண். முருகமூர்த்தி வீதி பிள்ளையார் கோவிலடி, அராலிவீதி- மாவீரர் பாடசாலை (வொம்மை வெளி), பி.ப. 2 முதல் 4 வரை -கலட்டி அம்மன் கோவில் அருகாமை, மானிப்பாய் வீதி ஐந்து சந்தி.

28-09-92 திங்கள்: மு. ப 8-30 முதல் 12-30 வரை சீனிவாசகம் வீதி- சிவன்பண்ணைச் சந்தி, மவுண்கார்மல் வீதி-பாங்ஷால் வீதிச் சந்தி.

பி. ப. 2 மணி முதல் 4 மணி வரை- டாக்டர் பிலிப்ஸ் நேர்சிங்ஹோம் -பிரதான வீதி. சென். ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயம்.

30-09-92 புதன்: மு. ப. 8-30 முதல்—12-30 வரை கோவில் வீதி-பிரதான வீதிச் சந்தி, கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரச ஆலயம்.

பி. ப. 2 மணி முதல் 4 மணி வரை. சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக.

01-10-92 வியாழன்: மு. ப. 8 மணி முதல் 12-30 மணி வரை கொழும்புத்துறை வீதி- வீதானையார் வீதிச் சந்தி, கச்சேரி - நல்லூர் வீதி புளூறிபன் விடுதி முன்பாக.

பி. ப. 2 மணி முதல் 4 மணி வரை சென். ஜோசப் வித்தியாலயம் கொழும்புத்துறை. பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலை முன்பாக.

02-10-92 வெள்ளி: மு. ப. 8-30 முதல் 12-30 மணிவரை நெடுங்குளம் பிரசவ விடுதி, அரியாலை, சித்திவிநாயகர் கோவிலடி.

பி. ப. 2 மணி முதல் 4 மணி வரை அரியாலை இருமகள் வீதி, நாயன்மார் கட்டு- இராஜ இராஜேஸ்வரி ஆலயம் அருகாமை.

21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ள இடங்களின் விவரம் நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது. (ம)

பண்டத்தரிப்பு

### ஸ்ரீ முருகன் லோன்றி

297/A, பலாலி தெற்கு வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றேன்

இ. சின்னத்துரை, உரிமையாளர்.

(22598)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை, தலைமையகம்.

### மேற்பார்வையாளர்

குடிசைகள் திருத்துதல், குடிசைகள் வேறு இடத்திற்கு மாற்றுதல், புதிய குடிசைகள் அமைத்தல் ஆகிய வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வையாளர் இருவர் இரண்டு மாதத்திற்கு மாத்திரம் அமர்த்தப்பட உள்ளனர். இவ் வேலையில் தேர்ச்சியும், அனுபவமும் பெற்றவர்கள் 21-09-92 திங்கட்கிழமை யாழ்.கிளை தலைமையகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சகல ஆவணங்களுடனும் சமுகம் தரவும்.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், 18-09-92.

(இ-3284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, பாடநெறி, பொதுவிவேகம், மொழித்திறன், ஆக்கம்: T. லோகநாதன் B.A., எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-3388)

சுத்த இன பொமனேரியன் [ஆண், பெண்] நாய்க்குட்டிகள், 45 நாட்கள் நிறைவடைந்தவை, பூச்சி அகற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸித்துஜா வைத்தீஸ்வரன், (மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் பாடசாலை முன்) மானிப்பாய்.

[22596]

## மாதிரிப் பரீட்சை

ஆண்டு 5இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 20-09-92 ஞாயிறு முற்பகல் 8, முற்பகல் 11க்கு நடைபெறும் வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(22595)

## ஆண்டு 4

1993 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு எம்மால் நடத்தப்படும் 2 ஆவது பயிற்சிப் பரீட்சை இன்று 19-09-1992 பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[22589]

## கைலேஞ்சி அன்பளிப்பு

உள்ளூர் கைத்தறியில் உருவான கைலேஞ்சி ஒன்று, மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் நாறு அனுப்பி அன்பளிப்பாகப் பெறுங்கள். உங்கள் அபிமான மில்க்வைற் நீல சோப்கட்டி ஒன்றின் விலை ரூபா 7/- மட்டுமே; மில்க்வைற்.

(3276)

## திருமண சேவை

உங்களுக்குத் தகுந்த பொருத்தமான மணமக்களை அடையவும், உங்கள் விருப்பம் போல் மன நிறைவுடன் வாழவும் நாடுங்கள்: புதிய மாங்கல்யா மரேச் சேர்விஸ், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். [செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் 2 மணி வரை சந்திக்கலாம்.]

[22480]

## அம்பாள் திருமண சேவை

B. A, வயது 30, மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சிவச்சாமிக்குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர்.

[22592]

## இலவச திருமண சேவை

வயது39, ஆசிரியம், உதயச் செவ்வாய், படித்த மணப்பெண்ணுக்கு மணமகனும், 44 வயது அத்தம், செவ்வாய் - 8 இரண்டாம் தரம் A-பிரிவு லிகிதருக்கு மணமகளும் தேவை. மாற்றுச் சம்பந்தமும் ஏற்கப்படும், சந்திப்பு ஞாயிறு காலையில், து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(5325)

## தவறிவிட்டது

பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதியில் சேவையில் ஈடுபடும் 29-7816 இலக்க மினிபஸ்ஸில் 14-09-92 அன்று 3½ பவுண் நகையும், உடுப்புப் பொதியும் மாறிவிட்டது. இதை எடுத்தவர்கள், நெல்லியடி, இருதய சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[5330]

## தேவை

100 அடிக்குக் குறையாத ¾'' அல்லது 1'' றப்பர் கோர்ஸ் பைப்பு அவசியம் வேண்டும். தொடர்பு: ரகுராமன், 53, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [5334]

## இலிகிதர் தேவை

யாழ். நகரில் பிரபல்யமான ஸ்ருடியோவிற்கு ஆங்கில அனுபவம் உடைய இலிகிதர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. மே/பா இல 860 உதயன், யாழ்ப்பாணம்.

[இ-3383]

# இடமாற்றம்

மல்லாகம் பிரிவு பிறப்பு, இறப்பு வலி- வடக்கு விவாகப் பதிவாளர் சந்தோர் உடுவில் றோட், மானிப்பாயில் இலங்கை பெந்தேகொஸ்தே சபைக்கு முன்பாக உள்ள வீட்டில் இயங்குகின்றது. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, ஐக்கிய வைத்தியசாலை, அளவெட்டி அரசினர் பிரசவ விடுதி ஆகியவற்றில் பிறந்த குழந்தைகளின் இலவசப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

திருமதி
நகுலேசதேவி - இராஜமனோகரன்.

(4973)

# பதவி வெற்றிடம்

1. ஆண் விடுதி மேற்பார்வையாளர்
   தகைமை: க. பொ. த. சா. சித்தியுடன் விவசாயம், விளையாட்டுத்துறை அனுபவம்;
2. பெண் விடுதி மேற்பார்வையாளர்
   தகைமை: க. பொ. த. சா. சித்தியுடன் தும்புவேலை, ஓலைவேலை, தையல், சங்கீதம், மேலதிகம்

வயது: 20 முதல் 45 வருடங்கள்

வேதனம்: 1150 — 1750 / 20 x 30

30 - 09 - 1992க்கு முன் விண்ணப்பிக்கவும்;

அதிபர்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

[இ-3283]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



[8 ஆம் வட்டாரம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நாகர் கோவில் வீதி, எழுதுமட்டுவாளை வசிப்பிடமாக கொண்டவருமாகிய]

## அமரர் வேலாயுதபிள்ளை சண்முகலிங்கம்

| ஆண்டவன் படைப்பு: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 13-09-1941 | 13-10-1987 |

பண்புமிக்க குடும்பத் தலைவராய்
பாசம் மிக்க தந்தையாய்
பழகுபவர்க்கெல்லாம் இனியவராய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் ஐந்து சென்றதையா
உங்கள் அன்பு முகம் பார்க்காமல்
எப்போ இனிக் காண்போமையா
எங்கள் குல விளக்கின் திருமுகத்தை
எங்கள் இதய தெய்வத்தின் ஆத்மா
சாந்தியில் இன்புற்று வாழ பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மக்கள்.

[5323]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**A/L**

1993 Aug.
1992 Aug. இல் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான

## பகல் நேர வினா-விடை

வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.
[செவ்வாய், வியாழன்]

### பிரிவு: I

பொருளியல்: திரு. க. கலாகரன் — 8-00 — 9-30 மணி

அளவையியல்: திரு. A. பிரபா — 9-30 — 11-00 மணி

வர்த்தகம்: திரு. R. இரகுநாதன் — 11-00 — 12-30 மணி

கணக்கியல்: திரு. S.K. பிரபாகரன் — 12-30 — 2.00 மணி

மாலை நேர வகுப்புக்கள்

தமிழ்: திரு. குழந்தைவேல் — 3-00 — 4-00 மணி

இ. நாகரிகம்: திரு. காரை. சுந்தரம்பிள்ளை — 4-00 — 5-00 மணி

### பிரிவு: II

அலகு ரீதியான (முழுப்பாடத்திட்டம்) வகுப்புக்களுக்கான நேர அட்டவணை
[செவ்வாய், வியாழன்]

8-00 — 9-00 அளவையியல்
9-30 — 11-00 பொருளியல்
11-00 — 12-30 கணக்கியல்
12-30 — 2-00 வர்த்தகம்

மாலை நேர வகுப்பு:

3-00 — 4-00 தமிழ்
4-00 — 5-00 இந்துநாகரிகம்

✶ எமது மாணவரின் சிறந்த பெறுபேறுகளே எமது உத்தரவாதம்.

[சி-3395]

எங்கள் இதயத்தை விட்டு என்றுமே அகலா எமது அன்னையின்

## 31ஆம் நாள்

## இதயக் கண்ணீர் அஞ்சலி

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 17 | 20 |
| 11 | 08 |
| 1922 | 1992 |



## மரியாம்பிள்ளை எட்வீசம்மா

அம்மா, அம்மா பாசமாய் எமை வளர்த்த அன்புத் தாயே! எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் - என்றும் எமக்காய் வாழ்ந்த அன்பு அன்னையே! அம்மா, அம்மா என்றழைத்து நேசமாய் இருந்தோமே. அன்பாய், பாசமாய் எம்முடன் இருந்து, எங்களைத் தவிக்க விட்டு எங்கு தான் சென்றாயோ? அம்மா என்றழைக்க அருகதையற்று விட்டோம். இனி உம்மைப் போல் அரவணைக்க வேறு யாருமில்லை அம்மா.

உங்கள் ஆத்மா இறைவனில் சாந்தி பெற
இறைவனை இறைஞ்சி நிற்கிறோம்.

இவரின் பிரிவால் தவிக்கும்;
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

புனித அந்தோனியார் கோவிலடி,
தாளையடி.

[5328]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தருணத்தை நழுவ விடலாமோ?

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை அரைவாசியாக வெட்டுவதென்ற அரசாங்கத்தின் முடிவைக் கண்டித்து தமிழ் மாவட்டங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகளும், மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.

வெகுசனப் போராட்டங்களின் முடிவில், அந்தந்த மாவட்ட மக்கள் சார்பில் ஜனாதிபதிக்கென மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். போரை விரும்பவில்லை. தங்களது பிரச்சினையை சமாதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் ஆவலாக உள்ளது. ஆனால் அரசாங்கம் போரைத் தங்கள் மீது திணித்திருப்பதை அவர்கள் வெறுக்கிறார்கள். அரசு தமிழர்களை அடக்கி ஆள எத்தனிப்பதை அவர்கள் சகிக்கவில்லை. தமிழ்ப் பிரதேசங்களை இராணுவ வலயங்களாக்கும் முயற்சியை அவர்கள் மூர்க்கத்தனமாக எதிர்க்கிறார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் சமர்ப்பித்த மகஜர்களைப் படித்துப் பார்ப்பாரானால் மேற்கண்ட விவரங்களை ஜனாதிபதியினால் இலகுவில் கிரகித்துக் கொள்ள முடியும். தமிழ்ப் பகுதிகளைக் கைப்பற்றி அங்கு இராணுவ முகாம்களைப் பெருக்குவதால் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் அல்லது உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்ற தமது எண்ணம் தவறானது என்பதை அவர் உணர ஏதுவாகும்.

"தமிழ்ப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுக. உண்மையாகவே நாட்டில் அமைதியைக் கொண்டுவர விரும்பினால் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்ற மன உணர்வே இங்கு பொதுவாக நிலவுகிறது. எனவே அர்த்தமற்ற இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு உணர்வு பூர்வமாக வேண்டுகிறோம். இருபக்கங்களிலும் ஆயிரம் ஆயிரமாக இறந்து கொண்டிருக்கின்றனர். காலம் கடந்த இவ்வேளையிலாவது பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள். ஓர் அரசியல் தீர்வுக்கு வழி காணுங்கள்" — என்று தமிழ் மக்கள் தமது மனநிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இந்தக் கருத்துக்கள் - நிலைப்பாடு - தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இருந்து நேரடியாக வருபவை. தூதுவர்கள் எவர் மூலமும் ஜனாதிபதிக்கு கிடைப்பவை அல்ல. யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு காலம் இன்னும் கடந்துவிடவில்லை.

இராணுவப் போர், உளவியல் போர், பொருளாதாரத் தடை, நிவாரணவெட்டு என்பவற்றால் பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் கண்டுவிட முடியாது. இவை தமிழர்களை மட்டும் அன்றி முழு நாட்டையுமே சீரழித்து விடும் என்பதை உணரவேண்டும்.

தவறு என்று தெரிந்து கொண்டும் அதனை இழைத்து விட்டு, பின்னர் ஒரு காலத்தில் அதற்காக வருந்துவதைவிட தவறு செய்யாமல் இருப்பது தான் புத்திசாலித்தனம்! தமிழர் பிரச்சினையைச் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்த்து வைக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். தமிழ் மக்கள் அதனை விரும்பிக் கேட்கும் இத்தருணத்தை நழுவவிட்டு, நாடு பிளவுண்ட பின்னர் கவலைப் படுவதால் பயனில்லை.

# அணிசேரா நாடுகள் என்ற ஓர் அமைப்பு இன்னும் தேவையா?

## சோவியத் கூட்டாட்சி உடைவு இதனை அர்த்தமற்றதாக்கிவிட்டது

கடந்த முழு நிலா நாளன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடந்த அறிவியல் அரங்கில் சர்வதேச நிலை குறித்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சத்தியசீலன் ஆற்றிய கருத்துரையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

தொகுப்பு: விளம்பி.

கிழக்கு - மேற்கு ஜேர்மனிகளின் இணைவு, சோவியத் யூனியன் கூட்டாட்சி உடைவு என்பவற்றால் உலக அரங்கில் கெடுபிடிகளில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

முன்னர் சோஷலிச — முதலாளித்துவ நாடுகள் என்று இருபெரும் பிரிவுகள் இருந்தன. இவை இரண்டிலும் இணையாத நாடுகள் தமக்குள் இணைந்து அணிசேரா நாடுகள் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன.

ஜேர்மனி மீள் ஐக்கியம், சோவியத் யூனியன் உடைவு என்பவற்றால் இந்த இருபெரும் பிரிவுகளான சோஷலிச— முதலாளித்துவ அமைப்புக்கள் பாதிக்கப்பட்டன. இதனால் கெடுபிடிகள் உலக அரங்கில் இன்று அகன்று வருகின்றன. இந்த நிலையில் அணிசேரா நாடுகள் என்ற ஓர் அமைப்பு இன்று தேவையற்றதாகி வருகிறது.

### அணிசேரா நாடுகள்

அண்மையில் ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 10 ஆவது மாநாடு அதன் எதிர்காலம் பற்றிய ஒரு கேள்விக்குறியுடன் முடிவடைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையை ஜனநாயகப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இந்த மாநாட்டில் இம்முறை எழுப்பப்பட்டது. அச்சபையில் 108 நாடுகள் இருந்த போதிலும் அவற்றில் 5 நாடுகள் மட்டுமே 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றன. இந்த 'வீட்டோ' அதிகாரத்தை அணிசேரா நாடுகளிலொன்றான இந்தியாவுக்காவது வழங்க வேண்டுமென்பது இந்த மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்று.

எனினும் அமெரிக்காவுக்கோ அல்லது ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கோ எதிரான கண்டனங்களை எழுப்ப அணிசேரா நாடுகள் பின்னடித்து விட்டன. தமக்கு மேற்குலகிடமிருந்து கிடைக்கும் பொருளாதார உதவிகளில் வெட்டு விழாதபடி பார்த்துக் கொள்வதிலேயே அவை கவனம் செலுத்தின.

ஐக்கிய நாடுகள் சபையை ஜனநாயகப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள அணிசேரா நாடுகளில் பல தமது நாடுகளில் ஜனநாயகத்தைப் பேணுகின்றனவா என்பது கேள்விக்குறியே.

### யூகோ விவகாரம்

யூகோஸ்லேவியா விடயத்தில் மேற்குலக நாடுகள் அதிக அக்கறை காட்டி வருகின்றன. பல ஆசிய நாடுகள் யூகோஸ்லேவிய நாட்டு பிரச்சினையை ஒத்த கிளர்ச்சிகளினால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் அக்கறை காட்டாத இந்த ஐரோப்பிய சமூகம் 'தங்கள் நாடு' என்ற நோக்குடன் யூகோஸ்லேவிய பிரச்சினையை தீர்ப்பதற்கான பல்முனை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

### சோமாலியா

சோமாலியாவில் தற்போது தோன்றியுள்ளதுபோன்ற பட்டினி நிலை 5 வருடங்களுக்கு முன் எதியோப்பியாவிலும் காணப்பட்டது. யூகோஸ்லேவிய பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் உணர்ந்துள்ள அளவுக்கு எதியோப்பிய பட்டினி நிலையை அவை கவனத்திலெடுக்கவில்லை என்பதே உண்மை.

சோமாலியாவுக்கு அருகிலுள்ள ஆபிரிக்க நாடுகளும் தங்களுக்கான பொருளாதார உதவிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதிலேயே கவனமாக இருந்து வருகின்றன. இதனால் எதியோப்பிய நிலையை உலகின் கவனத்திற்குக் கொண்டுவர அவை முன்வரவில்லை.

சோமாலியாவிலிருந்த மக்களில் பலர் பட்டினி நிலையைத் தவிர்ப்பதற்காக வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். அங்கிருந்த 10 லட்சம் குழந்தைகள் பட்டினியால் ஏற்கனவே இறந்து விட்டனர். தற்போது 30லட்சம் மக்கள் கடந்த ஒரு வருடகாலமாக அங்கு பட்டினியால் வாடி வருகின்றார்கள்.

அமெரிக்க தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டு ஜனாதிபதி புஷ் இவ் விவகாரத்தில் தற்போது அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளார். உணவுப் பொருள்கள் சோமாலியாவுக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டு வருகின்ற போதிலும், அங்கு நிலையான ஆட்சி ஒன்று இல்லாததினால் அவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை. பல குழுக்களாகப் பிரிந்து செயற்படும் எதியோப்பிய இராணுவம் அவற்றை அபகரித்து தாம் அனுபவித்து வரும் சம்பவங்கள் அங்கு தொடர்கின்றன.

### வளைகுடா

ஈராக்கில் குர்திஷ், ஷியா முஸ்லிம்களின் பாகுபாட்டை காரணமாக வைத்துக் கொண்டு ஈராக்கைத் துண்டாடும் முயற்சியில் அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் தற்போது ஈடுபட்டுள்ளன.

எத்தனையோ நாடுகளில் சிறுபான்மை இனம் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. ஆனால் அமெரிக்காவோ தன் நலனைக் கருத்திற் கொண்டு குர்திஷ் விவகாரத்தில் வெற்றி பெற முனைகின்றது. ஈராக் மீது விமானங்கள் பறக்க விதிக்கப்பட்ட தடை இதை நிரூபிப்பதாகவே அமைகிறது.

### தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவில் இரண்டு வருட காலமாக ஆளும் வெள்ளையர் அரசுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேச்சு நடத்தி வருகின்றது. இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை பல நாடுகள் விலக்கிக் கொண்டு விட்டன.

இந் நிலையில் பெரும்பான்மை கறுப்பர்களுக்கு ஆட்சி அதிகாரங்கள் கிடைப்பதை சிறுபான்மை வெள்ளையர்கள் தற்போது மீண்டும் எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு மேற்குலக நாடுகளின் மறைமுக உதவியும் கிடைக்கின்றது. இதனால் தீர்வு எட்டிப் போய்க் கொண்டிருக்கிறது.

### மத்திய கிழக்கு

தனது தேர்தல் வெற்றிக்கான ஒரு தளமாக மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதி புஷ் பயன்படுத்த முனைகிறார்.

இதனால் மத்திய கிழக்கு சமரச முயற்சிகள் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன. பல்முனை சமரச முயற்சிகள் அங்கு இப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

சமீபத்தில் இஸ்ரேலில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இவ் விவகாரத்திற்கு ஒரு தீர்வை எட்டும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த வாரம் 6 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றன. பாலஸ்தீனர்களுடன் பேச்சுகளில் பங்கு பற்ற மாட்டோம் என பிடிவாதமாக இருந்து வந்த இஸ்ரேல் இப்போது தனது பிடியைத் தளர்த்தியுள்ளது.

மூன்று இஸ்ரேல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலஸ்தீன பிரதிநிதிகளுடன் பேச்சுகளில் பங்குபற்ற முன்வந்துள்ளது ஒரு முக்கிய திருப்பமாகவே இங்கு கருதப்படுகின்றது. ★

# இடம்பெயர்ந்தோரின் தபால்கள் தபாலகங்களில் பெருமளவு தேக்கம்

யாழ்ப்பாணம், செப். 19

இராணுவ நடவடிக்கை காரணமாக வலி-வடக்கு, மேற்குப் பகுதிகளில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட உபதபால் கந்தோர்களில் வெளியூர் தபால்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் இத் தபாலகங்களுக்குச் சென்று, தமக்குரிய தபால்களைப் பெறத் தவறிவிடுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்கள் இத் தபாலகங்களுக்குச் சென்று தமக்குரிய தபால்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண பிரதி தபால்மா அதிபர் திரு. எஸ். எம். சேது காவலர் கோரியுள்ளார்.

## கிட்டு பற்றித் தகவல் இல்லை என்கிறார் சரத்முனசிங்கா

விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) வடக்கில் இருப்பதாக எவ்விதத் தகவலும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கவில்லை.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க வாராந்திரச் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டில் தங்கியிருந்த கிட்டு தற்போது இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குத் திரும்பி விட்டார் என ராய்டர் செய்தி ஸ்தாபனத்தை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது தெரிந்ததே. (இ-எ)

## திலீபனின் நினைவாக ஆயிரம் மரம் நடும் இயக்கம்

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஆயிரம் மரக்கன்றுகளை நடும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தியாகி திலீபனின் ஞாபகார்த்தமாக ஆயிரம் மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தீர்மானித்துள்ளது.

இந்த மரம் நடும் இயக்கத்தின் மூலம் தியாகி திலீபனின் தற்கொடையை நினைவு கூறுவதோடு குடா நாட்டில் மர நடுகையை ஊக்குவித்ததாகவும் அமையும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழக[illegible]ரங்கள் தெரிவித்தன.

மரக்கன்றுகள் விநியோகம் நாளை காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் என்றும், மரக்கன்றுகள் தேவைப்படுவோர் காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போட்டி நிறுத்தம்

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிக் கழகம் பாடசாலைகளின் மேற்பிரிவு மாணவர்களுக்கிடையே நடத்த இருந்த பொது அறிவுப் போட்டி நிறுத்தப்பட்டுள்ளதாக கழகத்தின் பரீட்சைச் [illegible]ள்ளது. (அ)

## தெங்கு மானிய திட்டம் வடக்கு - கிழக்கில் நிறுத்தம்

கொழும்பு, செப். 19

தெங்கு பயிர்ச்செய்கைக்கான மானியத் திட்டத்தை தெங்கு அபிவிருத்திச் சபை வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு நிறுத்தியுள்ளது.

எனினும் கொழும்பு, காலி, குருநாகல், கம்பஹா, மாத்தளை, புத்தளம், களுத்துறை, கேகாலை, அம்பாந்தோட்டைப் பகுதி தெங்குச் செய்கையாளர்களுக்கு இந்த மானிய திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. [த-ம]

## விலை உயர்வு

யாழ்ப்பாணம், செப். 19

தீப்பெட்டியின் விலை குடாநாட்டில் அதிகரித்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் தீப்பெட்டி ஒன்று ஏழு ரூபா வரை விற்பனையாகிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு யாழ். செயலகத்தினால் இது குறித்து அறிவிக்கப்பட்ட போதிலும் குமண கப்பலில் இம் முறை தீப்பெட்டிகள் எடுத்துவரப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## விஜயதசமிக்கு அரிச்சுவடி

எதிர்வரும் விஜயதசமி தினத்தில் வித்தியாரம்பம் செய்து வைக்கவுள்ள வித்தியாசாலைகள், ஆலயங்கள் என்பனவற்றுக்கு மிக்கவைற் தொழிலகத்தினால் பனை ஓலை அரிச்சுவடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இவை தேவைப்படுவோர் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்று மிக்கவைற் அதிபர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக

# ராமதாஸ், பண்ருட்டி கைதாகி விடுதலை;

# நெடுமாறனும் 2 தலைவர்களும் சிறையில்!

சென்னை, செப். 19

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி ஸ்தாபகரும் தலைவருமான டாக்டர் ராமதாஸ், பாட்டாளி மக்கள் கட்சி எம். எல். ஏயும் முன்னாள் மாநில அமைச்சருமான பண்ருட்டி இராமச்சந்திரன், தமிழ்த்தேசிய கட்சித் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோர் உட்பட ஏழு அரசியல் தலைவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

## தமிழகத்தில் வன்முறை வெடித்தது; 3,000 பேர் கைது

அண்மையில் சென்னையில் நடைபெற்ற — பாட்டாளி மக்கள் கட்சியின் மூன்று நாள் மாநாட்டில் — விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இந்தியாவுக்கு ஊறுதகம் விளைவிக்கும் முறையிலும் ஆட்சேபிக்கத் தக்க வகையில் பேசியதற்காக சட்டவிரோத தடுப்பு நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

டாக்டர் ராமதாஸ் திண்டிவனத்திலும், பண்ருட்டி இராமச்சந்திரன் சென்னையிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவு அமைப்பைச் சேர்ந்த தியாகு, முன்னாள் எம். எல். ஏயான வி. பி. சுப்பிரமணியம் மற்றும் மணியரசன் ஆகியோர் தஞ்சையிலும் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஏழு தலைவர்களில் ராமதாஸ், பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் உட்பட நால்வர் பின்னர் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் சென்னை பத்தாவது பஜில் திரேட் நீதிமன்றத்தில் முதலில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்களை 14 நாள் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பின்னர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில், இந்த நால்வரும் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொந்தப் பிணையில் அவர்களை விடுதலை செய்யும்படி நீதிவான் திரு. சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்தில் கைது செய்யப்பட்ட அவர்களை செஷன்ஸ் நீதிமன்றம் தான் விசாரிக்க வேண்டும் என்பதால், எடுத்த எடுப்பிலேயே அவர்கள் விடுவிக்கப் படவில்லை என்றாலும் —

பின்னர் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

திரு. ப. நெடுமாறனும் ஏனைய இருவரும் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி வரை காவலில் வைக்கப்பட வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

அவர்கள் மூவரும் வெவ்வேறு இடங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

தலைவர்கள் கைதான செய்தி வெளியாகியதை அடுத்து தமிழ்நாட்டில் பரவலாக பல இடங்களிலும் வன்செயல்கள் வெடித்தன.

செங்கை — எம். ஜி. ஆர், தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களிலேயே கூடுதலாக வன்செயல்கள் இடம் பெற்றன.

பல பஸ்கள் தீக்கிரையாக்கப் பட்டன; மற்றும் பல கல்வீச்சுக்கு இலக்காகி சேதமுற்றன; பலர் காயமடைந்தனர்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டமைக்காக சுமார் 3 ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஒருவர் பலி!

கொழும்பு, செப். 19

திருகோணமலை மாவட்டத்தில் பொதுமக்கள் சென்ற டிரக் ஒன்றின் மீது குண்டு வீசப்பட்டதில் குடிமகன் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-10)

## காங்கிரஸ் அழுத்தத்தால் கைது நடவடிக்கை!

பாட்டாளி மக்கள் கட்சி மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சி தீவிரமாக வலியுறுத்தியதை அடுத்தே மாநில அரசு கைது நடவடிக்கைகளில் இறங்கியதாகக் கூறப்படுகிறது.

இந்தியத் தமிழருக்கு இந்திய அரசமைப்பு மூலம் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று பிரிவினைவாதம் கோரியமைக்காகவும் —

இலங்கையில் தமிழீழம் கோரிப் போரிடும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டிருக்கும் போது அந்த இயக்கத்துக்கு ஆதரவாக இந்தியாவில் செயற்பட்டமைக்காகவும் —

பாட்டாளி மக்கள் கட்சிமீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## வி.பி.சிங்கையும் கைது செய்ய காங்கிரஸ் எம்.பி. கோரிக்கை

மணிலா, செப். 19

பாட்டாளி மக்கள் கட்சியின் மூன்று நாள் மகாநாட்டில் பங்கு பற்றிய இருபது சிறு கட்சிகளின் தலைவர்களையும் முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கையும் கைது செய்ய வேண்டும் என இந்திரா காங்கிரஸ் எம். பியான இரா. அன்பரசு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய மகாநாட்டில் புலிகளுக்கு ஆதரவாகவும் —

இந்தியத் தமிழருக்கு சுயநிர்ணய உரிமை கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன என்பது தெரிந்ததே.

இந்த மாநாட்டை ஒட்டி நடைபெற்ற பேரணியில் பலர் விடுதலைப் புலிகளின் தலைவரான திரு. வே. பிரபாகரனின் வண்ணப்படங்களை ஏந்தி வந்தனர் என்பதும் —

புலிகளுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரான இந்த மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்துத் தலைவர்களும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்று இரா. அன்பரசு கோரியிருக்கிறார். (இ-எ)

## இராஜத் துரோக குற்றத்தின் கீழ் கைது!

இந்தியாவில் இருந்து தமிழ்நாடு தனியே பிரிந்து, தனிநாடாக மாற வழிவகை செய்யும் விதத்தில் தமிழ்நாட்டுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறு கோரியதற்காகவே பாட்டாளி மக்கள் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு அவர்களின் செயல் எதிரானது என்பதால் இராஜதுரோகத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தமிழக உயர் பொலிஸ் அதிகாரி வோல்டர் தேவாரம் கூறினார்.

இராஜதுரோகக் குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக ஆயுள் காலச் சிறைத் தண்டனை விதிக்க இந்தியச் சட்டம் வழிவகை செய்கிறது என்றும் கூறப்படுகிறது. [உ-எ]

## குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சி தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளை பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் நேற்று மறுத்தார்.

"பல விடயங்களில் மத்திய அரசு தமிழர்களை பாரபட்சமாக நடத்துகின்றது என்பதை நாம் எடுத்துக் கூறினோம். அதனால் தான் புதிய அரசியல் சாசனம் அமைக்க வேண்டும் எனக் கோரினோம். இதை தேசத்துரோகம் என்று கூற முடியாது." என்றார் அவர்.

கைதாகி விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (உ-3)

### ஷெல், துப்பாக்கி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யம் பங்கையர்க்கரசி (வயது 39), அவரது பிள்ளைகளான உமாஜினி (வயது 12), கிரிசாந்தி (வயது 5), நிஷாந்தினி (வயது 3) ஆகியோர் காயமுற்றனர்.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சண்முகம் ஜனிதா (வயது 13) தொட்டிலடிப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் காயமுற்றார்.

மாகியப்பிட்டியில் விழுந்த ஷெல்லினால் அளவெட்டியைச் சேர்ந்த அருளையா நாகேஸ்வரி (வயது 42), சின்னம்மா (வயது 67) ஆகியோரும் காயமுற்றனர்.

படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் மாகியப்பிட்டி, தொட்டிலடிப் பகுதிகளில் அருள்சோதிநாதன் தமயந்தி (வயது 18), சுந்தையா தில்லைநாதன் (வயது 32), வேலாயுதம் மாலினி (வயது 12), தவராசா நிமல்ராஜ் (வயது 7), மார்க்கண்டு மோகனதாஸ் (வயது 21), நாகேந்திரம் கலாநிதி (வயது 28), இரத்தினசிங்கம் சின்னையா (வயது 77) ஆகியோர் காயமுற்றனர்.

இவர்கள் அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-15)

### வலி. மேற்குப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த படையினரும், மாதகல், திருவடிநிலை கடற்பகுதிகளில் பீரங்கிப் படகுகளில் தரித்து நின்ற கடற்படையினருமே இத் தாக்குதல்களை நடத்தினர்.

அளவெட்டி, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, தொட்டிலடி, சங்கானை, பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, பணிப்புலம், சுழிபுரம், பொன்னாலை, மூளாய், ஆகிய பகுதிகளில் ஷெல்கள் அடுத்தடுத்து வந்து விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன. இதனால் இப்பகுதிகள் நேற்றுக்காலை முழுவதும் அதிர்ந்தன.

காலை 6 மணிக்கு ஆரம்பித்து தீவிரமடைந்த ஷெல் தாக்குதல்கள் காலை 9 மணிக்குப் பின்னர் சற்றுத் தணிந்தன.

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியில் மரம் ஒன்றில் பட்டு வெடித்த ஷெல்லினால் வீட்டு மண்டபத்திலிருந்த வைத்திலிங்கம் இரத்தினசபாபதி (வயது 50) என்பவர் அந்த இடத்திலேயே மரணமானார். ஷெல் சிதறல் அவரது கழுத்தைத் துண்டாடியிருந்தது.

வடலியடைப்பு அரசடிச் சந்தியில் விழுந்த ஷெல்லினால் இளவாலையைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இராசநாயகம் (வயது 75) என்பவர் உயிரிழந்தார்.

அப்பகுதியிலிருந்த வைரவர் கோயில், சனசமூக நிலையம், மரக்காலை ஆகியன சேதமடைந்தன.

படையினரின் ஷெல் தாக்குதல்களினால் பரவலாகப் பல இடங்களிலும் வீடுகள், உடைமைகள் சேதமுற்றன; கால்நடைகள் பல உயிரிழந்தன; பெருமளவு பயன்தரு மரங்கள் நாசமாகின [உ-ம-3-12-13-15-17-28-68-143-162]

### யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனித செபஸ்தியார் வீதியில் விழுந்த ஷெல்லினால் யூஜின் வலன்ரைன் (வயது32), வரோனி (வயது 5), வசயல்விழி (வயது 3) ஆகியோர் காயமடைந்தனர்.

புதுமை மாதா கிழக்கு வீதியில் விழுந்த ஷெல்லினால் ஐயாத்துரை மதி (வயது 28) என்பவர் காயமுற்றார்.

டவுண்காசர்மேல் வீதி, பாங்ஷால் வீதி, ஆறாம் குறுக்கு வீதி, தண்ணீர்த்தாங்கி வீதி ஆகியவற்றில் இருந்த பல வீடுகள் இந்த ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்தன

திடீரென நடத்தப்பட்ட இத்தாக்குதல்களை அடுத்து நித்திரைப் பாயிலிருந்த மக்கள் எழுந்தோடி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

ஒரு பகுதி மக்கள் யாழ் கரையோரப் பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்தனர்.

எனினும் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் சுமார் ஒரு மணி நேரத்தின் பின் ஓய்ந்ததை அடுத்து கரையோரப் பகுதி வழமை நிலைக்குத் திரும்பியது

மண்டைதீவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டின் துண்டு ஒன்று யாழ் செயலக [illegible] சேதப்படுத்தியுள்ளது.

[உ-15-17-51-162]

### ஹெலி..!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யடைப்புப் பகுதிகள் ஹெலித் தாக்குதல்களுக்கு இலக்காகின.

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோயிலில் பெருந்தொகையான மக்கள் தஞ்சம் புகுந்திருந்த வேளை கோயிலை நோக்கி ஹெலி ஒன்று தாக்குதலை மேற்கொண்டது. இதனால் கோயிலின் கூரை சேதமடைந்தது. மக்கள் தெய்வாதீனமாகத் தப்பினர்.

நேற்றைய இராணுவ நடவடிக்கையின்போது விமானத் தாக்குதல்கள் இடம் பெறாதது குறிப்பிடத்தக்கதாகும்.

[உ-ம-3-12-13-15-17-28-68]


சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

பரிசளிப்பு விழா

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 24 — 09 — 1992
நேரம்: முற்பகல் 9-00 மணி
பிரதம அதிதி: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
(யாழ். பல்கலைக்கழகம் - மருத்துவபீடம்)
பரிசு வழங்குபவர்: திருமதி ஷாந்தி சிவஞானசுந்தரம்

விழாவுக்கு பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும்
★ அன்புடன் அழைக்கிறோம். ★

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(கி-3282)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org